## முக்கிய சாராம்சம்

சுதந்திர தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு (ANFREL), நவெம்பர் 16 ஆம் திகதியன்று வெற்றிகரமாகவும், பெரிதளவிற்கு அமைதியானதும் மற்றும் ஒழுங்கு முறைப்படியும் நடைபெற்றதான ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இலங்கை மக்களைப் பாராட்டுகின்றது. மக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்பவற்றின் நம்பிக்கையை ஈட்டும் ஒரு தேர்தல் செயன்முறையை அளிக்கும் அதன் அரசியலமைப்பு ரீதியான ஆணையை நிறைவேற்றியமைக்காக தேர்தல் ஆணைக்குழுவும் குறிப்பாகப் பாராட்டப்பட்டு அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். விரைவான மற்றும் உடனடியான ஓர் அதிகார மாற்றத்தை ஏற்படுத்தும் ஓர் அருமையான ஜனநாயக முதிர்ச்சியை வெளிப்படுத்தும் பின்னணியில் அனைத்துப் போட்டியிட்ட தரப்புகளாலும் தேர்தல் முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படட்டமை மூலமாக, தேர்தலின் வெற்றி எதிரொலித்தது.

நாடு முழுவதிலுமாக சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்தியதன் ஊடாக, நாட்டின் எதிர்காலம் தொடர்பில் எவ்வாறு இலங்கை மக்கள் வெளிவந்து தங்களது அங்கீகார ஆதரவினை நிலைநாட்டினர் என்பதை கண்காணிப்பு அணி கண்டது. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக தேர்தல் நெறிமுறைகள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை மனதில் கொண்டு தயாரித்த இந்த அறிக்கை மூலமாக, ANFREL தேர்தல் செயன்முறை தொடர்பான அதன் ஆரம்ப மதிப்பீடுகளை சமர்ப்பிக்கின்றது.

83.9% வாக்களிப்பு என்பது, வாக்கு மற்றும் அது கொண்டு வரும் மாற்றத்தின் எதிர்பார்ப்புகள் மீதான மக்களின் நம்பிக்கையின் ஒரு வலுப்படுத்தலாக நோக்கப்படுகிறது. ஆகையால், தேர்தல்களில் மக்களின் நம்பிக்கை தொடர்வதற்கும் மற்றும் அதனை வலுப்படுத்தும் முகமாக தேர்தல் செயன்முறைகளிலிருந்து எழுகின்றதாக கண்காணிப்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் ஆகிய இரு தரப்புகளும் அவதானித்த அனைத்துப் பிரச்சினைகளும் உடனடியாக கவனத்தில் கொள்ளப்படுவது அவசியமானதாகும்.

வாக்காளர்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்கு போதுமானதல்லாத பாதுகாப்புகள், வாக்களிப்பு நிலையங்களிற்குள் பொலிஸ் உத்தியோகத்தர்களின் வகிபாகம் தொடர்பில் பொதுவான தெளிவற்ற விளக்கம் மற்றும் தேர்தல் செயன்முறைகளின் போது அளிக்கப்பட்ட மற்றும் பழுதான வாக்குகளைக் கையாள்வது தொடர்பில் தேர்தல் அதிகாரிகளின் வெவ்வேறுபட்ட புரிந்துகொள்ளுதல்கள் போன்ற சில நடைமுறைரீதியிலான குறைபாடுகள் இருந்தபோதிலும், தேர்தல் தினத்தன்று வாக்களிப்புச் செயன்முறை சுமுகமாக நடைபெற்றது. எவ்வாறாயினும், இந்த சுமுகமான தன்மை அனைத்து வாக்காளர்களினாலும் உணர்ந்து கொள்ளப்படவில்லை. உடலூனம் அல்லது விசேட தேவைகளைக் கொண்ட நபர்களுக்கு, விசேடமாக சக்கர நாற்காலிகளில் முடங்கியுள்ள மற்றும் வயது முதிர்ச்சி கொண்ட வாக்காளர்கள், வாக்களிப்பு நிலையங்களை அணுகுவதற்கான வழிமுறைகள் ஒரு சவால் ஏற்படுத்துவதாக இருந்தமை ANFREL கண்காணிப்பாளர்களால் அநேகமாக அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் அவதானிக்கப்பட்டது. இந்த வாக்காளர்களுக்கு உதவிகள் அளிக்கப்படுதல் வேண்டும் என்பதை வாக்களிப்பு நிலைய உத்தியோகத்தர்கள் அறிந்துள்ள போதிலும், இத்தகைய உதவிகள் வாக்களிப்பு நிலையங்களிற்குள் மட்டுமே வழங்கப்பட்டன. குறிப்பாக வயது முதிர்ச்சியுடன் உதவி தேவையான மற்றும் விசேட தேவைகள் கொண்ட வாக்காளர்களுக்காக ஒரு கூடுதல் இயலுமான சூழ்நிலையை வாக்களிப்பு நிலையங்களில் ஏற்படுத்துவதில் கூடுதல் கவனமெடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட ஏனைய அரச முகவர் நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக ஸ்தாபனங்கள் என்பவற்றுக்கு ANFREL பரிந்துரைக்கின்றது.

இம்முறை 35 ஜனாதிபதி வேட்பாளர்களைக் கொண்ட தேர்தல் ஒரு களத்தில் தேர்தல் பிரச்சாரம் தனியே நான்கு பிரதான வேட்பாளர்களால் மாத்திரமே ஆதிக்கம் கொள்ளப்பட்டிருந்த ஒரு சூழலை ANFREL அவதானித்தது. இத்தகைய ஆதிக்கம், வழமையான பாரம்பரிய முறை மற்றும் சமூக ஊடகங்கள் ஆகிய இரண்டிலும் பல வேட்பாளர்களினால் பிரச்சாரங்களுக்காக தொடர்ச்சியானதும் மற்றும் கட்டுப்பாடற்ற முறையிலுமான செலவிடுதல் மூலமாக மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. பிரச்சார நிதியாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டக் கட்டமைப்பு இல்லாத ஒரு சூழ்நிலை, போட்டிக் களத்தை பணம் படைத்த வேட்பாளர்கள் பக்கம் கூடுதலாகச் சாய்த்தது. தேர்தல்கள், பன்முக வருமானம் கொண்ட குழுக்களை பிரதிநிதித்துப்படுத்தும் வேட்பாளர்களையும் கூடுதலாக உள்வாங்கியிருக்கச் செய்வதற்கு பிரச்சார நிதியாக்கம் குறித்தான சட்டங்களுக்கான உடனடியான நடவடிக்கைகளுக்கு, இலங்கைப் பாராளு மன்றத்திற்கு ANFREL பரிந்துரைக்கின்றது. இதற்கு மேலதிகமாக இம்முறை இலங்கை தேர்தலில் காணப்பட்ட, தங்களது எதிர் வேட்பாளர்களை ஆதரிக்கும் போலி வேட்பாளர்களைத் தடைசெய்வதற்கான நடைமுறைகளையும் தேர்தல் ஆணைக்குழு கவனத்தில் கொள்ளலாம்.

பிரச்சாரக் காலம் வேட்பாளர்களின் பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற பிரச்சார முறைகளினால் பெரிதும் ஆதிக்கம் செலுத்தப்பட்டுக் காணப்பட்டது அரச மற்றும் தனியார் ஊடகம் ஆகிய இரண்டுமே

தேர்தல்களில் அக்கறை கொண்ட பலரினால் பக்கச்சார்பு கொண்டவையாக இருப்பதற்கு கட்டாயப்படுத்தப்பட்டன. தேர்தல் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது விஞ்ஞாபனங்கள் பற்றிய பக்கச்சார்பற்ற தகவல்களுக்கான வழிமுறைகளுக்கு வாக்காளர்கள் உரிமை கொண்டிருப்பற்கு, ஊடக நிறுவனங்கள் தாங்களே தங்களைக் கொள்கைநிலைப்படுத்தியும் மற்றும் தங்களது அங்கத்துவர்கள் அதனை உறுதிப்படுத்துவதற்குமான ஒரு முன்னெடுப்பை எடுப்பதன் மூலமாக எதிர்கால தேர்தல்களில் இந்தகைய பக்கச்சார்புநிலைகள் தவிர்க்கப்பட முடியும்.

தபால் மூல வாக்களிப்புச் செய்முறையும் கூட அமைதியானதாகவும் மற்றும் ஒழுங்குமுறையில் அமைந்ததாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒரே விதமாக அமைந்திருக்கின்ற அரசாங்க ஊழியர்கள் மற்றும் தனியார் தனிப்பட்டவர்களுக்கும் இந்த சலுகையை விரிவுபடுத்துவதன் மூலம் இந்த அப்பியாசம் மேலும் மேம்படுத்தப்பட முடியும். இந்த வசதியின் நன்மைக்குத் தகுதியான வாக்காளர்களுக்கு அது கூடுதல் ஊக்கமளிப்பதாக இருப்பதற்கு இந்த தபால் மூல வாக்களிப்பு நிலைய அமைவிடங்கள் குறித்து மேலும் ஆராயப்படுதல் வேண்டும்.

இலங்கை வாக்காளர்கள் தேர்தல்கள் பற்றிய அடிப்படை அறிவைக் கொண்டிக்கக் காணப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு வேட்பாளருக்கு மட்டும் எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றி அறிந்தவர்களாக இருந்தனர். அத்தகைய அடிப்படை அறிவு, ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்காக வாக்களிப்பதற்கு, சட்டபூர்வமாக அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பை வாக்காளர்களுக்கு மறுத்தது. அதனால், தேர்தல் ஆணைக்குழு இலங்கை வேட்பாளர்களுக்கு கூடுதல் விரிவான வாக்களிப்புக் கல்வியை வழங்கவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். உள்ளூர் தேர்தல் ஸ்தாபனங்களும் கூட தனியே நகரப் பகுதிகள் மீது கவனம் செலுத்தாது, ஏனைய சுற்றிவரவுள்ள மக்களிற்கும் வாக்காளர் கல்வியை அளிப்பதற்கான பணிகளை முன்னெடுத்தல் வேண்டும்.

நவெம்பர் 16, ஜனாதிபதித் தேர்தல் நாட்டில் எதிர்காலத்தில் நிகழவுள்ள தேர்தல்களின் ஓர் அடையாளத்தைக் குறிக்கின்ற போதிலும், நாட்டில் வசிக்கும் பன்மைச் சமூகங்களின் கூடுதலான நம்பிக்கையை மேலும் பெற்றுக்கொள்வதற்கு தேர்தல் செய்முறைகள் கூடுதலாக உள்ளிணைக்கின்றவை யாகவும் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை கொண்டவையாக இருப்பதற்கு, மேலும் மேம்படுத்தல்கள் தேர்தல் செய்முறைகளில் மேற்கொள்ளப்படுவதற்கு முடியும்.